வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 28/2024

வழக்கு சாட்சி – எ.ம.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு. அம்ஜத் இப்ராஹிம் | தொழில் | :: வியாபாரம் |
| த/ பெயர் | :: ஷாசுலி இப்ராஹிம் | வயது | :: 41/2026 |
| கிராமம் | :: மதுரை மேற்கு | | |
| தாலுகா | :: மதுரை தெற்கு | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 16.06.2026.

**முதல் விசாரணை** (நேரம் : மதியம் 02.55 மணி)

நான் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அவை தயார் செய்யப்பட்டது. **நான் உத்திரகோசமங்கை காவல்நிலைய சார்பு ஆய்வாளருக்கு ஆன்லைன் மூலம் அனுப்பிய புகார் மனுவின் நகல் எ.ம.சா.ஆ.1. அதற்கான ஆன்லைன் Acknowledgment நகல் எ.ம.சா.ஆ.2.** என்னை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகிறேன்.

**5ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து சம்பந்தமாக உத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணைக்கு பிறகு குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் மீது மேல்நடவடிக்கை எடுத்ததாக காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.06.16 17:40:40 +0530

செய்யவில்லை. விபத்தானது என்னுடைய கவனக்குறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே நான் தான் மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் மீது தவறு உள்ளதால் தான் அப்போதே நான் மனுதாரருக்கு நஷ்ட ஈடாக ரூ.50,000/– கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல, மனிதாபிமானம் அடிப்படையில் தான் மனுதாரருக்கு அந்த தொகை கொடுத்தேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து நடக்கும்போது இரவு சுமார் 08.20 மணியிருக்கும். விபத்து சமயம் நான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று எதிரே மனுதாரர் வந்த ஆட்டோ மீது மோதி என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் மனுதாரருக்கு இடுப்பு, கீழ்தண்டுவடம், வலது தொடை ஆகிய இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதுமட்டுமல்லாமல் மனுதாரருக்கு உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தை தொடர்ந்து மனுதாரருக்கு எலும்பு முறிவிற்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த சிகிச்சைகள் அனைத்தும் மனுதாரருக்கு மதுரை, வேலம்மாள் மருத்துவமனையில் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தினால் மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதை அறிந்து கருணை அடிப்படையில் நான் மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்தேன். விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சைக்காக மனுதாரருக்கு ரூ.15,00,000/– வரை செலவானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக புலன் விசாரணை செய்த போலீசார் நான் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் காரை ஓட்டிச்சென்று மனுதாரர் வந்த ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக என் மீது ம.சா.ஆ.15 குற்ற இறுதி

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.06.16 17:40:46 +0530

அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் அதனை நான் மறுக்கிறேன். இந்த விபத்து வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் பொய்யாக எ.ம.சா.ஆ.1 மனுவை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கொடுத்த புகாரின் விசாரணைக்கு என்னை அழைத்ததாக தான் எ.ம.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் நான் காயம்பட்டது சம்பந்தமாக மருத்துவ சான்றிதழோ, மருத்துவ பில்லோ தாக்கல் செய்யவில்லை. விபத்து சம்பந்தமாக உத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயம் என்னிடம் முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதையும், நான் என்னுடைய வாகனத்தை அதிவேகமாக ஓட்டி சென்றதும் தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டு தொகை நான் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.06.16 17:40:52 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.